**தேசிய விஞ்ஞான மன்றம் - 2023**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் (''மன்றம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 நிதிக்கூற்றக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் தொடர்ந்தும் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற கிரயப் பெறுமதி ரூபா 100,250,215 ஆன சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்பதரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 100,250,215 ஆன சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் மீண்டும் மீளாய்வு செய்வதற்காக சொத்துக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| Office 365 A3 மென்பொருளில் 2022 நவம்பர் 05 ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 04 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்காக அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 464,356 தொகை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 392,038 குறைத்தும் முன்னர் செலுத்தப்பட்ட செலவினங்கள் ரூபா 392,038 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | Office 365 A3 மென்பொருளின் அனுமதிப்பத்திரத்திற்குரிய ஆவணங்களை கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கும் போது அனுமதிப்பத்திரத்தின் தினக்காலப் பகுதி உரிய பிரகாரம் குறிப்பிடப்பட்ட ஆவணமொன்று சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த செலவினம் 2024 இன் செலவினமாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த செலவினம் 2023 நவம்பர் 05 முதல் வருகின்ற செலவினமாக உறுதிப்படுத்தப்படுகின்றமையால் உரிய சரி செய்தல்கள் 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | ஆண்டிற்குரிய சகல செலவினங்களும் வருடாந்த கணக்குகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,045,055 தொகை மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 906,895 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,951,950 ஆன கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கறுவா செயற்திட்டத்தில் ஒரு செயற்திட்டத்தின் இறுதி அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கொவிட் 19 மற்றும் Kids naturalist செயற்திட்டத்திற்காக நன்கொடை யாளர்களிடமிருந்து கிடைத்த பணத்தில் மிகுதித் தொகை தொடர்பாக அவர்களின் ஆலோசனை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 438 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை | 2022 இன் பொருள் மெய்மையாய்வு சபையினால் ஏலத்தில் இடவேண்டியமை மற்றும் காண்பிக்கப் பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்ட பயன்படுத்த முடியாத சொத்துக்கள் தொடர்பாக தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 இன் பொருள் மெய்மை ஆய்வு அறிக்கை வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தினால் பொருள் மெய்மையாய்வு சபையினால் பயன்படுத்த முடியாததாக இனங்காணப்பட்ட பொருட்கள் தொடர்பாக அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 438 இன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. அந்த பொருட்களை மிகவும் விரைவாக விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி | பதவிநிலை உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் | இந்த முற்பணம் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 9.1 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) | உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 25,000 வரை ஆகக் கூடிய அளவில் சில்லறைக்காசு கட்டுநிதி வைத்துக் கொள்வதற்காக தமது விருப்பத்தின் அடிப்படையில் அனுமதி வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 27 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,577,900 கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | தேசிய விஞ்ஞான மன்றம் நீண்டகாலத்தில் இருந்து கடன் அடிப்படையில் பெறுவதுடன் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியுடன் எரிபொருள் விலை உயர்வடைந்து சென்றதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் அந்த நிறுவனம் கடனடிப்படையில் எரிபொருள் விநியோகித்தலை தற்காலிகமாக நிறுத்தி இருந்ததுடன் அதிலிருந்து 2023 யூலை மாதம் வரை அந்தத் தீர்மானம் அமுலில் இருந்தது. அந்தக் காலப் பகுதியில் நிறுவனத்தின் குழாம் வாகனத்திற்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக முற்பணம் வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தாபனவிதிக் கோவையின் XIV அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு | அரசாங்கத்தின் உத்தியோகத்தருக்கு தங்குமிடம் மற்றும் பிரயாணங்களுக்காக ஏற்படுகின்ற செலவினத்தை மீளளிப்புச் செய்வதற்காக இணைந்த படிகளும் பிரயாணப் படிகளும் மீளளிப்புச் செய்யப்படுகின்ற போதும் அதற்கு முரணாக பொதுத் திறைசேரி அங்கீகாரமின்றி மன்றத்தால் 2019 ஒக்டோபர் மாதம் முகாமைத்துவ சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கண்காட்சிகள் அல்லது நிறுவன சூழலுக்கு வெளியே | கண்காட்சி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் மிகவும் வசதியீனமான பணியாக இருந்தமையால் அதற்காக பங்குபற்றுவதற்கு பதவியணியினரை ஊக்குவிப்பதற்காக கண்காட்சிகளுக்காக பங்குபற்றுபவர்களுக்கு கஷ்டப் படி செலுத்துவதற்கு முகாமைத்துவ சபையால் 2019 ஆம் ஆண்டின் போது தீர்மானம் எடுக்கப் பட்டிருந்ததுடன் அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் முன்னர் குறிப்பிடப்பட்ட மாகாபொல கண்காட்சிக்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்காக கஷ்டப்படி | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றுகின்ற 05 உத்தியோகத்தர்களுக்காக 18 நாட்களுக்காக கஷ்டப்படி (Hardship Allowance) கூட்டுமொத்தமாக ரூபா 11,200 தொகையும், உணவு பானங்களுக்காககூட்டு மொத்தமாக ரூபா 68,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டுள்ளது. பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்படுகின்ற சகல படிகளும் அங்கீகாரத்திற்காக பொதுத் திறைசேரிக்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக அங்கீகாரம் கிடைத்தவுடன் மிகுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுவரை நிறுவனம் தாபனவிதிக்கோவையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்கின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,842,305 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 38,548,294 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 17,705,989 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மூலதனச் செலவினம் ரூபா 18,467,208 இனால் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 1,185,223 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்கள் மூலம் நடாத்தப்படுகின்ற விஞ்ஞானக் கல்வி, மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மானியம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலைகளுக்கு அறிவிக்காமையின் காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மானியம் பெற்றுக் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஷேட விஞ்ஞான கல்வி செயற்திட்டத்தின் மூலம் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை அதிகரித்துக்கொள்வதற்கு வழிகாட்டுதல் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | நாட்டில் விஞ்ஞானக் கல்வியைக் கட்டியெழுப்புதல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் மன்றத்தால் போதியளவான பிரகாரம் பாடசாலைகளுக்கு அறிவித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்காக 05 பாடசாலைகள் மாத்திரம் விண்ணப்பித்திருந்ததுடன் ரூபா 690,153 மானியம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் காலநிலை மாற்றம் மற்றும் தேசிய இடர் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 02 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 8,454,100 மானியம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் தலைப்பு மற்றும் தெரிவாக மாற்றுவதற்கும், ஏனைய செயற்திட்டத்தில் ஈடுபடுவதை வரையறுக்கப்பட்டதன் காரணமாக உடன்படிக்கை செய்யப்பட்ட நோக்கங்களுக்கு போதியளவாக செய்யப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடும் போது போதியளவான தொகை செலவிடப்பட்டதா என கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. மிகவும் தாக்கமளித்துள்ள பிரதேசங்களில் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தீர்மானத்தை பகுப்பாய்வு செய்வதல் மிகவும் ஆக்கபூர்வமானதாகும். நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற முதியோர்களை விட ஆகக்குறைந்த மட்டத்தில் வெப்பநிலை தாக்கத்தின் அடிப்படையில் இடம்பெறுகின்ற காலநிலைத் தாக்கங்களுக்கு உட்படுகின்றமையினால் இந்த நுழைவின் மூலம் ஏனைய சகல நிலையங்களும் இந்த பிரதேசத்தைவிட வெப்பம் மற்றும் உஷ்ணம் குறைந்த ஆபத்து காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படுகின்றது. ஏனைய செயற்திட்டத்தில் செலவிடப்பட்ட தொகைக்கு நியாயமான வகையில் தேயிலை மற்றும் தெங்கு பயிர்ச் செய்கைத் துறையில் மாத்திரம் மேவுகை செய்யும் வகையில் ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் விளைவு தேயிலை மற்றும் தெங்கு பயிர்களுக்குரிய பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு போதியளவாக இருந்தது. | அரசாங்கத்தின் நிதியத்தை செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டின் போது தொழில்நுட்ப | 03 செயற்திட்டங்களுக்குரிய உடன்படிக்கையின் 8.5.1 | 04 செயற்திட்டங்களுக் |

| | | |
|---|---|---|
| கையளித்தல் 04 செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 15,469,633 கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 02 செயற்திட்டங்களின் தாமதக் காலத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த 02 செயற்திட்டங்களில் ஒரு மானிய நலனாளி தொடர்புபடுத்திக் கொள்வதில் பிரச்சினையான நிலைமைக்கு முகங் கொடுத்திருந்ததுடன் மேலும் மானிய நலனாளி ஓய்வு பெற்று வெளிநாடு சென்றிருந்தார். அதன் காரணமாக மானிய உடன்படிக்கை 8.5.1 இன் பிரகாரம் மானிய நலனாளிகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவின் பிரகாரம் பிரதான ஆராய்ச்சியாளரால் 05 வருட காலம் செயற்திட்டத்திற்குரிய புதிய செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்று 2024 மே மாதம் முடிவடைவதற்கு முன்னர் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய செயற்திட்டத்தின் மானிய நலனாளியைத் தொடர்படுத்திக் கொள்வதில் பிரச்சினை தொடர்பாக பிரதேச செயலகம் ஊடாக கிராம உத்தியோகத்தரின் இரகசிய அறிக்கை கோரப்பட்டுள்ளதுடன் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. | குரிய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைமையை விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 மார்ச் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களஞ்சியப் பொருட்கள் தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற சகல துணைப் பாகங்களுடன் ரூபா 750,750 பெறுமதியான 07 கணனிகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் (CPU) 14 உம், 12 மொனிட்டரும் மற்றும் 16 தட்டச்சு பலகைகளும் (Keyboard) விளைவற்றுக் காணப்பட்டது. | இது All-In-One கணனி இயந்திரம் 2016 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாக இருந்ததுடன் மென்பொருள் நாளதுவரையாக்கி தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்ட கணனி வலையமைப்பை பயன்படுத்த முடியாதிருந்தமையால் சேவையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | உபகரணங்களை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

சிக்கலான தகவல்களை அகற்றி ஒழுங்குமுறைப்படுத்தி விற்றுத்தீர்க்கப்படும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய விஞ்ஞான மன்றத்தால் 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் 06 செயற்பாடுகளுக்கான நிதி ஏற்பாடு ரூபா 4 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 0.72 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டதன் காரணமாக நிதிசார் செயல் முன்னேற்றம் 18 சதவீதம் ஆகும். திட்டங்கள் அந்தந்த பணிகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் புள்ளிவிபர ரீதியில் காண்பிக்கப்படாதிருந்த 13 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடம், நிதி ஏற்பாட்டின் வரையறை, போக்குவரத்து வசதியீனம் மற்றும் குறித்துரைத்த காலத்தில் நிதி ஏற்பாடு கிடைக்காமை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயலமர்வுகள் நடாத்துவதற்கு வசதியீனம் ஏற்பட்டதன் காரணமாக நோக்கங்களை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |